தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
ஆலோசனை சுற்றறிக்கை 2004/நூல/02(அ) (திருத்தியமைக்கப்பட்ட 2022)

**உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பொது நூலகங்களில்**
**"ஒக்டோபர் - தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்.**

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்குரிய ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்** மற்றும் **விசேடமான செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல பொது நூலகங்களிடமும் கோரப்பட்டுள்ளன. **"அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு"** என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இவ் வருடத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 02. செயற்திட்டக் குழு

இந் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பு செய்வதற்காக வாசிப்பு மாதத்தின் செயற்திட்டக் குழுவொன்றினை நியமிப்பது உசிதமானது. தற்போது நூலகத்தில் நூலகக் குழுவொன்று காணப்படுமாயின் அக் குழுவின் ஊடாக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதன்பொருட்டு பிரதான செயற்பாட்டுக் குழுவொன்றினை நியமித்துக் கொள்வதும் உசிதமானதாக அமைந்திருக்கும். அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு அமைந்திருத்தல் வேண்டும்.

- நிறுவனத்தின் தலைவர் அல்லது உப தலைவர் - குழுவின் தலைவர்
- நகர ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவன செயலாளர் - உப தலைவர்
- நூலகர் / நூலகப் பொறுப்பாளர் - குழுவின் செயலாளர்
- சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பொது சுகாதார பரிசோதகர்
- விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்
- ஒரு பிராந்திய வைத்தியசாலையின் தலைவர் அல்லது பரிந்துரைக்கப்பட்டவர்
- வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர்
- பிரதேச செயலகத்தின் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

## 03. நடைமுறைப்படுத்த முடியுமான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- புத்தகங்களை வாசித்து வாழ்க்கையை வெற்றிக்கொண்டவர்களின் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களினை நூலக தொகுப்பில் சேகரித்தல் மற்றும் அதனை விசேட திட்டத்தின் கீழ் ஒழுங்கமைத்து வருடம் முழுவதும் விளம்பரப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்தல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தித் திட்டத்தின் (SDG 04) நான்காவது நோக்கத்தின் படி, "சரியான, நியாயமான மற்றும் தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும்

அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அனுகலை வழங்குதல்" என்ற இலக்கை அடைய சமூக எழுத்தறிவு மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல்.

- ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தித் திட்டத்தின் (SDG 05) ஐந்தாவது நோக்கத்தின் படி, "பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல்" என்ற இலக்கை அடைய வாசிப்பு ஊக்குவிப்பு திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- ஆராட்சியாளர்கள் / பாடசாலை மாணவர்கள் மற்றும் தகவலை தேடும் பிரதேச பொது மக்களின் தேவைகளுக்காக தகவலை அணுகுவதற்கு தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை வழங்குதல்.
- நூலக சமூகத்தின் முறைசார்ந்த மற்றும் முறைசாரா கல்வி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான திட்டங்களை செயற்படுத்தல்.
- இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் உயர் கல்வி தேவையுள்ள அங்கத்தவர்களின் தகவல் தேவைகளை அடையாளம் காண நடவடிக்கை எடுத்தல்.
- உள்ளூராட்சிப் பகுதியில் உள்ள "ஒவ்வொரு வீடும் ஒரு நூலகம்" என்ற கருத்தை மையமாக கொண்டு வீட்டு நூலகங்களை தொடங்குவதற்கான திட்டங்களைச் செயற்படுத்தல்.
- வீட்டு நுகர்விற்கு பொருத்தமான பயிர்கள் மற்றும் தாவரங்கள் பற்றி விழிப்புணர்வூட்டுவதுடன் அப்பயிர்களை வளர்ப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்.
- வாசகர் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வாசகர்களின் வீடுகளிலும் வீட்டுத் தோட்டங்களை செய்வதற்கு ஊக்குவித்தல்.
- பயிர்களின் விற்பனை / பரிமாற்றம் தொடர்பான சந்தைப்படுத்தல் வசதிகளுக்கு நூலக வளாகத்தை வழங்குதல்.
- இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் நூலக சேகரிப்புக்கள் பற்றிய விவரங்கள் மற்றும் தகவல்களை விளம்பரப்படுத்தல்.
- உள்ளூர் கைத்தொழில்கள் தொடர்பான பல்வேறுப்பட்ட சுயதொழில்கள் தொடர்பான அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டுதல்.
- "பசுமை நூலகம்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றுச் சூழலை பாதுகாத்தல் தொடர்பாக நூலகம் சார்பில் செய்யக்கூடிய செயற்பாடுகளை செய்தல்.
- பிளாஸ்டிக் மீள்சுழற்சிக்கான சேகரிப்பு மையமாக நூலகம் செயற்படுதல் அல்லது அதனுடன் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனத்தை வழிநடாத்தல்.
- வாசகர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வடிவமைப்புக்களைக் கொண்ட இதழ்கள் மற்றும் சவரொட்டிகளை வெளியிடுதல்.
- தொனிப்பொருளுடன் தொடர்பான பல்வேறுபட்ட போட்டிகளை நடத்துதல். (கட்டுரை போட்டி, சித்திரப் போட்டி)
- தொனிப்பொருளுடன் தொடர்பான போஸ்டர்களை வடிவமைத்தல்.
- புதிய அங்கத்தவர்களை சேர்த்தல் மற்றும் இலவச அங்கத்துவத்தை வழங்குதல்.
- நூலகம் பற்றிய விளம்பரப் பிரச்சாரங்களை நடாத்துதல்.
- தொடர்புடைய பிரதேசத்தில் சிறந்த வாசகரைத் தேர்ந்தெடுத்தல்.
- நடமாடும் நூலக சேவைகளை நடாத்துதல்.

- சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க கதை கூறும் நேரம், சிறுவர் படங்கள், சிறுவர் நாடகங்கள் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தல்.
- சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவது தொடர்பில் பிற ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க ஏனைய நூலகங்களுடன் இணைந்து கூட்டுறவுத்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- நூலக முகநூல் (Face Book) பக்கத்துடன் இதுவரை இணையாத வாசகர்களை அடையாளம் கண்டு அவர்களை முகநூல் பக்கத்துடன் இணைத்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் முகநூலில் வாசிப்பு தொடர்பான மேற்கோள் உரைகள் மற்றும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளல்.
- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறுப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுதல்.
- உள்ளூரில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய கருத்துக்கள் மற்றும் யோசனைகளைக் கொண்டு வரும் சிறுவர்கள் மற்றும் பொது மக்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**04. நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

இத்திட்டங்களை செயல்படுத்தும் போது, சுகாதார அமைச்சினால் வெளியிடப்படுகின்ற புதுப்புக்கப்பட்ட கொவிட் -19 (CODID-19) சுகாதார வழிகாட்டிகள் மற்றும் சுற்றறிக்கைகளை பின்பற்றுவது நல்லது. தொடர்புடைய வழிகாட்டிகளுக்கு கீழே உள்ள இணைய இணைப்பைப் பார்க்கவும்.

http://www.health.gov.lk/moh_final/english/article_read_more.php?id=885

**05. நிதி**

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்த தேவையில்லை. தேவைப்படும் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் அல்லது நூலகத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**06. அறிக்கை தயாரித்தல்.**

- மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றினை (அச்சு/இருவெட்டு மூலம்) குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசுடன் **2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்** 28 ஆந் திகதிக்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலக்கம்** 14, **சுதந்திர வழி, கொழும்பு** 07 எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- வெற்றி பெற்ற நுலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக முதன்மையாகக் கருதப்படும் அறிக்கைக்கான மதிப்பெண்களை வழங்கும் போது, வாசிப்பை ஊக்குவித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்க ஒரு முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது (மொத்த மதிப்பெண்களில் 75%). நூலகத்தினால்

நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய சமூக சேவைகள் தொடர்பான தகவல்களுக்கு 25% மதிப்பெண்கள் வழங்கப்படும். விவசாயம் / சுற்றுச்சூழல் திட்டங்கள் போன்றவை)

- அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக காலம் மற்றும் நிதி அவசியமில்லை. தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு ஆதாரங்களுடன் முன்வைத்தல் போதுமானதாகும்.

## 07. மதிப்பீடு

- தேசிய வாசிப்பு மாதம் 2022 இல் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2023 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது பரிசுகள், சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கப்படும். மதிப்பீட்டு நடவடிக்கைகள் நூலக மட்டங்களில் இடம்பெறுவதனால் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய பொது நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்கள் வெவ்வேறாக தங்களது அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். இறுதியாக தேர்ந்தெடுக்கப்படும் நூலகங்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் மதிப்புரை வழங்கப்பட்டதன் பின்னர் விருதுகளுக்கு உரித்துடைய நூலகங்கள் எவை என தீர்மானிக்கப்படும்.

தலைவர்

Professor Nanda Dharmarathna
Chairman
National Library and Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் - 077 1236858
இணையத்தளம் - www.natlib.lk

இணைப்பு - தேசிய வாசிப்பு மாத அறிக்கையினைத் தயாரிப்பதற்கான பொது வழிகாட்டி

## தேசிய வாசிப்பு மாத அறிக்கையினைத் தயாரிப்பதற்கான பொது வழிகாட்டி

முன் அட்டை தயாரித்தல் – திட்டம், தொடர்புடைய ஆண்டை குறிப்பிடல் மற்றும் அறிக்கையை சமர்ப்பிக்கும் நூலகத்தின் பெயரை பிழையில்லாமல் குறிப்பிடவும்.

உள்ளே முதல் பக்கம்
- நூலகத்தைப் பற்றிய சிறு அறிமுகம்.
  நூலகத்தின் தாய் நிறுவனம், முகவரி மற்றும் நூலகத்திற்கான பிற சாத்தியமான இணைப்புகள்
  (தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, இணையப் பக்கங்கள்)
- நூலகத்தின் பணிக்கூற்று
- நூலக வளங்கள் மற்றும் அமைப்பு
- வாசகர்களுக்காக வழங்கப்படும் நூலக சேவைகள்

பொருளடக்கம்

(1) **தேசிய வாசிப்பு மாதத்திற்காக நடத்தப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்.**
தொடர்புடைய செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட அனுமதி
வளவாளர்கள்
பங்கேற்பாளர்கள் - கையொப்ப ஆவணங்களின் நகல்கள் (சான்றளிக்கப்பட்ட முதல் பக்கம் மற்றும் கடைசிப் பக்கம் போதுமானது)
நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

- **நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்**
  தொடர்புடைய செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட அனுமதி
  திட்டத்தை செயல்படுத்துவதன் நோக்கங்கள்
  வளவாளர்கள்
  பங்கேற்பாளர்கள் - கையொப்ப ஆவணங்களின் நகல்கள் (சான்றளிக்கப்பட்ட முதல் பக்கம் மற்றும் கடைசிப் பக்கம் போதுமானது)
  நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

(2) நூலகத்தின் வருடாந்த திட்டத்தின்படி நடத்தப்படும் வாசிப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்
- வருடாந்த திட்டம்
- நிகழ்ச்சிகள் செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள்

(3) நூலகத்தால் நடத்தப்படும் பிற சமூக நிகழ்ச்சிகள்

(4) இணைப்பு
திட்டம் தொடர்பான சான்றிதழ்கள், விளம்பர துண்டு பிரசுரங்கள், செய்தித்தாள் விளம்பரங்கள் போன்றவற்றை இதன் கீழ் சேர்க்கவும்.

❖ தலைப்புப் பக்கம், சுருக்கம், அறிமுகம் மற்றும் பரிந்துரைகள் என்பன தனி பக்கத்தில் மட்டுமே தொடங்க வேண்டும். இருப்பினும், ஒவ்வொரு பிரிவையும் புதிய பக்கத்துடன் தொடங்குவது நல்லது.

❖ புகைப்படங்கள் உட்பட அனைத்து பக்கங்களும் வரிசையாக இலக்கமிடப்பட வேண்டும்.

❖ தேவையற்ற ஆடம்பரமான விளக்கக்காட்சிகள் / விடயங்கள் உள்ளடக்க வேண்டாம்.